# எழுதி வளர்ந்த இயக்கம்

**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

■ பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்**

20



## மனுநீதியா, சமூகநீதியா?

ஓர் அரசியல் இயக்கம் அல்லது ஒரு கட்சியில் இருப்பவர்கள், மூன்று விதமான நூல்களைப் படித்தாக வேண்டிய கடமை உள்ளது.

ஒன்று, நாம் சார்ந்திருக்கிற, ஏற்றுக் கொண்டிருக்கிற இயக்கத்தின் வரலாறு, கோட்பாடு ஆகியன பற்றிய நூல்களைப் படிப்பது. இரண்டாவது, உலக அரசியல், வரலாறு, இலக்கியம் முதலான பொது நிலையிலான நூல்களைப் படிப்பது. மூன்றாவது, நம் கொள்கைகளுக்கு நேர் எதிரான கொள்கைகளைக் கொண்ட இயக்கத்தின் கருத்துகளையும், அதன் அடிப்படைக் கோட்பாடுகளையும் படித்து அறிவது!

மூன்றாவது வகையிலான ஒரு நூல் குறித்தே இப்போது நாம் பார்க்க இருக்கிறோம். தமிழ்நாட்டின் மைய அரசியல், ஆரிய - திராவிடப் போராட்டமே என்பதை நாம் அறிவோம். இரண்டுக்குமான அடிப்படை வேறுபாடு, பிறப்பின் அடிப்படையில் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வை ஏற்கலாமா, கூடாதா என்பதுதான்.

மனிதர்களைப் பிறப்பின் அடிப்படையில் நான்கு வருணங்களாகப் பிரித்துப் பார்த்து, மேல் கீழ் என்று அடுக்குவது ஆரியம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது திராவிடம். படைப்பின் அடிப்படையிலேயே ஆண் உயர்ந்தவன், பெண் தாழ்ந்தவள் என்பது ஆரியம். 'பெண்ணும் ஆணும் சமமானவர்களே' என்பது திராவிடம். சுருக்கமாகச் சொன்னால், 'மனுநீதியா சமூக நீதியா?' என்பதுதான் அன்று தொட்டு இன்றுவரையில் நடந்து வரும் மிகப்பெரிய சமூக, அரசியல் போராட்டம் என்று சொல்லலாம். நாம் படிக்க இருக்கும் நூலின் பெயர் **'அசல் மனுதர்ம சாஸ்திரம்'** என்பது!

### இந்துச் சட்ட மூல நூல்

இந்த நூல் முதன்முதலாக, 1919- ஆம் ஆண்டு திருவந்திரபுரம் கோமாண்டூர் இளைய வில்லி ராமானுஜ ஆச்சாரியாரால் மொழிபெயர்க்கப் பெற்று, சென்னை, பத்மநாப விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டுள்ளது. அப்போது அதற்கு 'மனு தர்ம சாஸ்திரம்' என்று பெயர். அதைத்தான், அப்படியே எழுத்து மாறாமல், **'அசல் மனுதர்ம சாஸ்திரம்'** என்னும் பெயரில் பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனம் பிறகு வெளியிட்டுள்ளது.

மனுநீதி என்பது மௌரிய சாம்ராஜ்யம் அழிக்கப்பட்டு, அந்தப் பேரரசின் கடைசி மன்னனைக் கொன்றுவிட்டு, ஆட்சிக்கு வந்த புஷ்யமித்ரன் (கி.மு. 185 – 149) என்னும் ஒரு பார்ப்பனரின் ஆட்சியில், ஒரு குழுவினரால் எழுதப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். **'அரச கொலை அல்லது பார்ப்பனியத்தின் வெற்றி'** என்னும் தன் நூலில், அண்ணல் அம்பேத்கர் அவர்களும் இந்நூல் குறித்து விரிவாக எழுதி உள்ளார்.

எப்போதோ எழுதப்பட்ட இந்நூல் பற்றி இப்போது ஏன் நாம் பேச வேண்டும்? அந்நூல் குறிப்பிடும் செய்திகள் இன்றைக்கு நடைமுறையில் உள்ளனவா என்று சிலர் கேட்கின்றனர். ஆனால் **'இந்துச் சட்டம்'** *(HINDU LAW)* என்பதற்கான மூல நூல்களில் ஒன்றாக இதுவும் குறிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே, இந்நூல் பற்றி அறிந்து கொள்வது மிக மிகத் தேவையானதாகும்.

### பாகுபாடுகள் நிறைந்த நூல்

இந்நூலில் சமூக சமத்துவத்துக்கு எதிராகப் பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. அல்லது, அப்படிப்பட்ட செய்திகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன என்றும் கூறலாம். எடுத்துக் காட்டாக, சாதி அடிப்படையிலும், பால் அடிப்படையிலும் எப்படிப்பட்ட பாகுபாடுகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை மட்டும் நாம் பார்க்கலாம்.

ஒன்பதாவது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கும் இரண்டு விதிகள் இவை. "வேத சாஸ்திரம் அறிந்த, கீர்த்தி பெற்ற, கிருகஸ்த பிராமணனுக்கு சிசுருஷை செய்வதே சூத்திரனுக்கு மோட்சத்தை தருவிக்கிற மேலான தர்மமாகும் (334)".

அதற்கு அடுத்த சூத்திரம், "உள்ளும் புறமும் பரிசுத்தனாய், உயர்ந்த சாதியானைக் கொடுமையாகப் பேசாமல் பிராமணனுக்கு- அவன் இல்லாவிடில் சத்ரியனுக்கு- அவன் இல்லாவிடில் வைசியனுக்கு- மேலாகப் பணிவிடை செய்துகொண்டு, அஹங்காரம் இல்லாமல், நாடோறும் அடுத்து இருக்கிற சூத்திரன் மேலான சாதி ஆவான்" (335).

**மனிதர்களைப் பிறப்பின் அடிப்படையில் நான்கு வருணங்களாகப் பிரித்துப் பார்த்து, மேல் கீழ் என்று அடுக்குவது ஆரியம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது திராவிடம்.**

எனவே சூத்திரன் என்பவன், மேலே உள்ள மூன்று வருணத்தார்க்கும் பணிவிடை செய்வதே, அவனுக்கான வாழ்நாள் பணி என்கிறது மனு(அ) தர்மம்!

### கசடுகளைக் களைய... கசடறக் கற்க...

பெண்களைப் பற்றி - அவர்கள் பார்ப்பனப் பெண்களாகவே இருந்தாலும் - மிக இழிவான இடத்தில் வைத்து மனுநீதி பேசுகிறது. இரண்டாவது, ஐந்தாவது, ஒன்பதாவது அத்தியாயங்களில் பெண்களைப் பற்றிய இழிவான கருத்துகள் இடம்பெற்றுள்ளன. ஒரு பெண் சிறுமியாக இருக்கும் போது தந்தைக்கும், திருமணம் ஆன பிறகு கணவனுக்கும், வயது முதிர்ந்த நிலையில் மகனுக்கும் அடங்கியிருக்க வேண்டும் என்று கூறுகிறது! கணவன் குடிகாரனாக இருந்தாலும், இன்னொரு பெண்ணோடு தொடர்புடையவனாக இருந்தாலும், சூதாடியாக இருந்தாலும், நோயுற்றவனாக இருந்தாலும், அவனை அவன் மனைவி தெய்வமாக வணங்க வேண்டும் என்கிறது இந்த மனு (அ)நீதி!

எல்லாவற்றையும் விட, ஒன்பதாவது அத்தியாயத்தில், 19-வது சூத்திரத்தில் சொல்லப் பட்டிருக்கும் செய்தி மிகக் கொடுமையானது. அது இது தான்- **"மாதர்கள் பெரும்பாலும் விபச்சார தோஷம் உள்ளவர்கள் என்று அனேக சுருதிகளிலும், சாஸ்திரங்களிலும் சொல்லப் பட்டிருக்கிறது".**

எனவே, பெண்களை எப்போதும் கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பது அது சொல்லும் நீதி. இப்படிப்பட்ட ஒரு நூலை, மிகப்பெரிய சாஸ்திர நூல் என்று அறியாமையின் காரணமாக இன்றும் பலர் கூறி வருகிறார்கள்.

**எனவேதான், திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள் ''உள்ளுவரோ மனு நீதி, ஒரு குலத்துக்கொரு நீதி" என்கிறார் மனோன்மணீயம் நூலில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இருப்பினும், இந்நூலில் உள்ள கசடுகளை அறிந்து, மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக நாமும் படிக்க வேண்டி இருக்கிறது!**

**-வாசிப்போம்**

## திராவிட இயக்க இதழ்கள் - இனமுழக்கம்



1959 - ஆம் ஆண்டு, தி.மு.கழகத் தலைவர்களில் ஒருவரான சி.பி.சிற்றரசு அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்டது **'இனமுழக்கம்'** என்ற வார இதழ். அந்த இதழின் பதிப்பாளர் **கண்ணப்பா வள்ளியப்பன்.** உலக வரலாறு, தமிழின் பெருமை, நடப்பு அரசியல், திரைப் பிரபலங்களின் பேட்டி எனப் பல விஷயங்களைத் தாங்கி வெளிவந்திருக்கிறது, அந்த இதழ். கட்டுரை, கவிதை, கேள்வி பதில் எனப் பல வடிவங்களில் படைப்புகள் வெளியாகியிருக்கின்றன.

'ஜோலாவின் கடிதங்கள்' என்ற தலைப்பில், ஆசிரியரே எழுதிய கடிதப் பகுதியும் வெளிவந்தது. மேலும் இந்த இதழில், **தென்னரசு, நாஞ்சில் மனோகரன், ராதாமணாளன், தொண்டைமான்** போன்ற தலைவர்கள் எல்லாம் தங்கள் படைப்புகள் வழியாகப் பங்களிப்பைச் செலுத்தியிருக்கிறார்கள்.

இந்த இதழின் பெரும்பாலான அட்டைப் படங்களில் பேரறிஞர் அண்ணா மிளிர்கிறார். 1960 செப்டம்பர் 9-ஆம் தேதியிட்ட இதழில், தலைவர் சத்தியவாணி முத்து (இந்த ஆண்டு இவருக்கு நூற்றாண்டு) அவர்களை, வீரமங்கை வேலு நாச்சியார் போன்று வரைந்து, அந்த ஓவியத்தை அட்டைப் படத்தில் போட்டு பெருமைப்படுத்தியுள்ளனர். ஆனால், 1960 அக்டோபர் 14-ஆம் தேதியிட்ட இனமுழக்கம், வழக்கமாக இடம் பெறுகின்ற முகப்பு இல்லாமல் வெளிவந்துள்ளது. "இனமுழக்க இதழிலே வருகின்ற ஒவ்வொரு கட்டுரையும் சுவையாக இருக்கிறது. அப்படி இருக்கையில் முன்பக்கத்திலும் ஏன் நீங்கள் கட்டுரைகள் வெளியிட்டு, எங்களுடைய எண்ணத்தைப் பூர்த்தியாக்கக்கூடாது?' என்று பல தோழர்கள் நாள்தோறும் மடல்கள் வரைந்து கொண்டிருப்பதால், இவ்வார இதழ் முகப்பை நிறுத்தி இருக்கிறோம். மேலும் உங்கள் நல்லெண்ணத்தைத் தெரிவிப்பீர்களானால், அதன்படி செய்ய கடமைப்பட்டவர்களாவோம்" என்ற அறிவிப்புடன், அட்டையிலே செய்திக் கட்டுரைகளோடு வெளியாகியிருக்கிறது.

இந்த இதழில்தான் பிரபல திரைப்பட **இயக்குநர் மகேந்திரன்** உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். "அவர் எழுதிய சினிமா விமர்சனங்கள் கட்சிக்கு அப்பாற்பட்டவர்களால் பெரிதும் விரும்பப்பட்டது. பாராட்டப்பட்டது. கட்சி சார்ந்தவர்கள் கதை, வசனம் எழுதும் படங்களையும் அதில் பாரபட்சமில்லாமல் மகேந்திரன் விமர்சனம் செய்தார். அது பல சந்தர்ப்பங்களில் மிகவும் கடுமையாக அமைந்ததும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில், பத்திரிகை முதலாளிக்குக் கட்சிக்காரர்களிடமிருந்து நெருக்கடி உண்டானது. ஆனால், ஆசிரியர் சிற்றரசு, அந்த எதிர்ப்புகளை உதறித் தள்ளினார். 'அந்தப் பையன் எழுதுவது சினிமா விமர்சனம். அது அவனோட கருத்து. அதிலே யாரும் தலையிட முடியாது. அந்தப் பையன் கட்சிக்கு எதிராக தலையங்கம் எழுதினால்தான் தப்பு' என்று சொல்லிவிட்டார்" என்று காலம்சென்ற பத்திரிகையாளர் **சுதாங்கன்** சொல்லியிருக்கிறார். திரைப்படங்கள் தொடர்பாக அவ்வளவு நடுநிலையோடு நடந்து கொண்டிருக்கிறார் ஆசிரியர்.

இந்த இதழின் பதிப்பாளர், **'காவியக் கழகம்'** என்ற பெயரில் புத்தகப் பதிப்பகம் ஒன்றையும் நடத்தியிருக்கிறார். அதன் மூலம் கவியரசு கண்ணதாசனின் கவிதைகள் புத்தகமாக வெளிவந்தன.

## :.ப்ளாஷ்பேக்



### வெள்ள நிதி!



சன்னாசி

1996-ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த போது, கடலோர மாவட்டங்களில் பெரும் வெள்ளச்சேதம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள். அச்சமயம், எங்கள் பகுதியில் கழகத்தின் சார்பாக வெள்ள நிவாரண நிதி வசூல் செய்து, தலைவரிடம் கொடுக்க சென்னை சென்றோம். தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரைச் சந்தித்து நிதி வழங்கினோம். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.


**-எஸ்.சன்னாசி, நகர தி.மு.க. முன்னாள் செயலாளர், சின்னமனூர், தேனி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம் என்.எஸ்.கே - அண்ணா

**1957 - ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் மறைந்தார். அந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது கழகத்தின் வெற்றிக்காகப் பல தொகுதிகளிலும் சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபட்டவர், குளித்தலை தொகுதியில் போட்டியிட்ட கலைஞருக்காக மூன்று முறை பிரசாரம் செய்தார். தேர்தலுக்குப் பின்னர், சேலம் அருகே ஓர் ஊராட்சியில் அறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைத்து உரையாற்றியதுதான் கலைவாணர் கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி. அதேபோல, கலைவாணர் சிலையை சென்னையில் திறந்து வைத்ததுதான் பேரறிஞர் அண்ணாவின் கடைசி பொதுநிகழ்ச்சி.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 147




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.